கலாதீபம்

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 01.01.2025 தீபம் 31

# கலாசாலையில் சிறப்புற இடம்பெற்ற ஒளிவிழா

## வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்



# கலாசாலையின் கலைமலர் சஞ்சிகை வெளியீடு

## யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி அவர்கள் கலந்து சிறப்பித்தார்






அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்

01.12.2024 — 31.12.2024 காலப்பகுதிக்கான நிகழ்வுகளின் தொகுப்பு

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**வளவாளர்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

திரு இ.செந்தூர்ச்செல்வன்
ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

செல்வி தி.பெலினி
ஆசிரிய மாணவி விஞ்ஞானநெறி (2023/2024)

**பட ஒருங்கிணைப்பு**

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

திரு மு.கஜேந்திரன்
ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.

**வெளியீடு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com

# கலாசாலையில் எயிட்ஸ் தினத்தை ஒட்டிய விழிப்புணர்வு கருத்தரங்கு

சர்வதேச எயிட்ஸ் தினத்தை ஒட்டிய கருத்தரங்கு 06.12.2024 வெள்ளிக்கிழமை கலாசாலை கணித விஞ்ஞான மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவன் இ.செந்தூர் செல்வன் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் யாழ் போதனா வைத்தியசாலையின் எயிட்ஸ் கட்டுப் பாட்டி ற்கான தேசிய நிகழ்ச்சித் திட்ட சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர் குணராஜா நக்கீரன் அதிதி பேச்சாளராக கலந்து கொண்டு எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு உரையை ஆற்றினார்.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீ சன் அதிதி பேச்சாளருக்கான அறிமுக உரையினை மேற்கொண்டார்.





கலாதீபம்

KALADEEPAM

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

### ஆசிரியர்களும், சமூக எதிர்பார்ப்பும்

ஆசிரியர் பதவி என்பது ஒரு தொழில் அல்ல, மாறாக ஒரு புனிதமான பணி என்றதொரு உளப் பாங்கு ஆசிரியர் மத்தியில் ஏற்படும்போதுதான் அப்பணியின் முழுமையான அடைவுகளை அடைந்து கொள்ள முடியும். ஆனால், அவ்வாறான மனப்பாங்கு சமகால ஆசிரியர்கள் பலரிடத்தில் காணாமல் போனது கவலையளிக்கும் விடயமாகும்.

பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக, பாடசாலை ஆசிரியர்களை நம்பி ஒப்படைக்கும் பெற்றோர் பிள்ளைகளுக்காக இரவு, பகல் என்று பாராது உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் இத்தகைய பெற்றோர்களின் நம்பிக்கை எத்தனை ஆசிரியர்களினால் காப்பாற்றப்படுகிறது என்ற கேள்வி தற்போது ஆசிரியர்களினால் சமூக மாற்றத்தை எதிர்பார்த்திருக்கின்றவர்கள் மத்தியில் எழுகிறது.

அக்கால ஆசிரியர்களுக்கு கற்பித்தல் பணி மாத்திரமே பொறுப்பாக இருந்தது. ஆனால் இக்கால பாடசாலை ஆசிரியர்கள் பலர் ஆவணப் பணியையும் புரிய வேண்டிய கட்டாய சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். அவர்கள் மீது அதிகாரிகளினால் அதிகளவிலான ஆவணச் சுமை சுமத்தப்பட்டுள்ளது என்பதையும் மறைக்க முடியாது.

அரசினதும், சமூகங்களினதும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் மனப்பாங்குடன் ஒவ்வொரு ஆசிரியரும் செயற்பட்டு ஆரோக்கியமான எதிர்கால சந்தியினரை உருவாக்குவதன் மூலம் சமூக மாற்றத்தினைக் காணமுடியும்.

## கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கான ஆக்கச் செயற்பாட்டுப் பயிலரங்கு

கலாசாலையில் ஆசிரிய மாணவர்கள் கழிவுக் கடதாசியிலிருந்தான ஆக்க வேலைகளை செய்யும் பயிலரங்கில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வு 07.12.2024 சனிக்கிழமை காலை முதல் மாலை வரை இடம் பெற்றது.

கலாசாலையின் சித்திரத்துறை விரிவுரையாளர் திருமதி சர்மிளா பாஸ்கரனின் வழிப்படுத்தலில் ஆசிரிய மாணவர்கள் கழிவுப்பொருளிலிருந்தான ஆக்கத் திறன் செயற்பாட்டில் ஈடுபட்டனர்.







# News in Brief - Month of December

## 04.12.2024
### Annual OLI VIZHA Celebration
The celebration organized by Kopay Teacher College Christian Forum was held on Wednesday morning under the leadership of College Principal S.Laleesan.
The Chief Gust Mr M.Patrick Diranjan Secretary - Ministry of Education Northern Province. Special Guest Anthonoppillai Jemes Mayshan, Lecturer National College of Education. Guest of Honour Rev.Fr.Stanislaus Duke Vincent, Director Catechetical Centre - Diocese of Jaffna and retired lecturer V.S. Gunaseelan also participated.

## 06.12.2024
### AIDS Day Awareness Seminar
International AIDS Day observed on Friday 06.12.2024 organized by College Mathematics and Science Forum.

This event held under the leadership of Science course teacher student E.Shenthurselvan, Senior Public Health Inspector of National Program for AIDS Control of Jaffna Teaching Hospital Gunaraja Nakkeeran participated as guest speaker and gave an awareness speech about AIDS.

## 07.12.2024
### Creativeness Activities
Under the guidance of Mrs. Sarmila Bhaskaran, Art Lecturer of the College, the students engaged in creativeness activities from waste material.

## 10.12.2024
### Launching Ceremony of Kalaimalar 101st Anniversary Souvenir
The launching ceremony of Kalaimalar magazine, which is the 101st anniversary issue of Kopay Teachers' College, was held on Tuesday at 9 am at Rathilakshmi Hall under the chairmanship of Principal Shandramoulesan Laleesan.

The Chief Guest Hon.Rajeevan Jeyachandramoorthy, Member of Parliament, Jaffna Electoral District. Special Guest Mrs Selva Ambigai Nandakumaran, Senior Lecturer, Dept. of Tamil, University of Jaffna.were participated in this event. The Editor K. Balashanmugan Deliverd publisher talkTamil Department Lecturer N. Selva Ambigai gave a review of the book. Lecturer S. Manokaran delivered the vote of thanks.

## 11.12.2024
### Launching of “Blooming Buts” (A Collections of Poems)
The book Launching ceremony of Blooming Buds, a collection of English poems written by Kopay Teachers' College English Course teacher students, was held on Wednesday at 8.30 am at Rathilakshmi hall. It was held under the chairmanship of the Principal S.Laleesan
The Chief Gust Mr.M.Prabaharan, Coordinator & Senior Lecturer of English Vavuniya NCoE.was lounched the book. Lecturer Vel Nandakumar received the first copy of the book. The events were organized by English course teacher students. The teacher student Orima Jelsiya delivered the vote of thanks.

## 12.12.2024
The function for the teacher students who have completed their training at Kopay Teachers' College was held under the leadership of the Principal of the College, Shandramouleesan Laleesan,
This event Organized by first year teacher students, the event featured felicitations by lecturers and performances by teacher students.
A special musical show featured a concert by College alumnus James Antons; Friends musical group.

**13.12.2024**
College was Closed for academic 13.12.2024 and it will be reopened on 06.01.2025

**20.12.2024**
**The results of the final examinations of the college** were released. Two students; obtained a high result of 12A. The final examination results for the academic year 2021-22 in the teacher colleges were published online on 20.12.2024.
While the results of the final examination are not officially available to the colleges - according to the information received online, out of the 94 teacher students who wrote the examination, 9 teacher students have obtained results above as 10A. All teacher students pass the examination.

# கலாசாலையில் சிறப்புற இடம்பெற்ற ஒளிவிழா வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கிறிஸ்தவ மன்றம் நடத்திய ஒளி விழா கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் 04.12.2024 புதன்கிழமை கலாசாலை அதிபர் இடம்பெற்றது .

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சனும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி கிறிஸ்தவபாட விரிவுரையாளர் அ.ஜேம்ஸ் மெய்ஷானும் கௌரவ விருந்தினராக யாழ் மறை மாவட்ட மறைக்கல்வி நடுவுநிலைய இயக்குனர் அருட்பணி டியூக் வின் சென்ட் அடிகளாரும் விசேட விருந்தினராக கலாசா லையின் ஓய்வுநிலை விரிவுரையாளர் வ.சி.குண சீலனும் கலந்து கொண்டனர் .

நிகழ்வின் ஆரம்பத்தில் திருப்பலி ஒப்புக்கொடு க்கப்பட்டது. யாழ் ஆயர் இல்ல மறை அலை ஊடக இணைப்பாளர் அருட்பணி அ.அன்ரன் .ஸ்ரிபன் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார். கிறிஸ் தவ மன்றக்காப்பாளர் திருமதி பிரபாலினி தனம் வாழ்த்துரை வழங்கினார்.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆசிரியை திருமதி ஜெரளின் தனுசியா விஜிதரன் மண்டைதீவு மகா வித்தியாலய ஆசிரியை திருமதி டொய்நிலா அ ஜந்தி ஊர்காவற்றுறை புனித மரியாள் றோமன் கத்தோலிக்க பெண்கள் வித்தியாலய ஆசிரியை செல்வி தனிஷா மிசேல் ஆகியோர் கவந்து கொண்டு தீர்ப்பினை வழங்கினர்.











# கலாசாலையில் சிறப்புற இடம்பெற்ற ஒளிவிழா பரிசில் வழங்கும் வைபவம்

**ஒளிவிழாவை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளும் அதில் வெற்றி பெற்ற மாணவர்கள் விபரமும்**

1. **நத்தார் சின்னம் தயாரித்தல் (29.11.2024)**

முதலாமிடம் - செல்வி. தி. பெலினி (முதலாம் வருட விஞ்ஞானநெறி)
இரண்டாமிடம் - Mrs.M.I.F.சவ்னா (இரண்டாம் வருட விசேட கல்விநெறி)
மூன்றாமிடம் - திருமதி. ச. நுஸ்லா (முதலாம் வருட விசேட கல்விநெறி)

2. **கரோல் கீதம் (02.12.2024)**

முதலாம் இடம் -
முதலாம் வருட ஆசிரிய மாணவர்கள்
இரண்டாம் இடம் -
இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்கள்

3. **நத்தார் மரம் தயாரித்தல்(02.12.2024)**

முதலாமிடம் - இரண்டாம் வருட ஆங்கில நெறி ஆசிரிய மாணவர்கள்
இரண்டாம் இடம் - இரண்டாம் வருட ஆரம்பப்பிரிவு விசேட கல்வி, இரண்டாம் மொழி சிங்கள ஆசிரி ய மாணவர்கள்
மூன்றாம் இடம் - முதலாம் வருட ஆங்கில , உடற் பயிற்சி, கத்தோலிக்க, விசேட கல்வி மாணவர்கள்

















# கலாசாலையில் சிறப்புற இடம்பெற்ற கலைமலர் சஞ்சிகை வெளியீடு
# ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி அவர்கள்
## ( யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)
## கலந்து சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 101 ஆவது ஆண்டு சிறப்பிதழாக அமைந்த கலைமலர் சஞ்சி கையின் வெளியீட்டு விழா 10.12.2024 செவ்வாய் க்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் தேர்தல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச் சந்திரமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் செல்வஅம்பிகை நந்தகுமரனும் கௌரவ விருந்தினராக கல்விக் காருண் யன் ஈ.எஸ்.பி நாகரத்தினம், கலாசாலையின் முன்னாள் அதிபர் வீ. கருணலிங்கம், கலாசாலை சிவன் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ பா. செல்வசேனக்குருக்கள், டாக்டர் க. ஜெயச்சந்திரமூர்த்தி ஆகியோரும் கலந்து கொண் டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் சிவன் ஆலயத்தில் விசேட பூசை இடம்பெற்று கல்வியங்காடு சுதா ரஜீவன் குழு வினரின் மங்கல இசையுடன் வரவேற்பு ஊர்வலம் இடம் பெற்றது. தேசிய கீதம் இசைக்கப்பட்டு தேசியக்கொடி மற்றும் கலாசாலைக்கொடி என்பன ஏற்றப்பட்டன.

மண்டப நிகழ்வுகள் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்ப மாயின. திருக்குறள் வணக்கம், தமிழ் வணக்கம் என் பன இசைக்கப்பட்டதைத் தொடர்ந்து விசேட கல்வி நெறி ஆசிரிய மாணவி முகமட் அன்சார் அஸ்மிலா பேகம் நிகழ்வுகளை முன்னிலைப்படுத்தினார்.

கலாசாலையின் பிரதி அதிபர் த. கோபாலகிருஷ்ணன் வரவேற்புரை ஆற்றினார். அதிபரின் தலைமையுரையைத் தொடர்ந்து மலராசிரியர் கு. பாலஷண்முகன் வெளியீட் டுரை ஆற்றினார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெ. ரஜீவன் நூலை வெளியிட்டு வைக்க கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி நாகரத்தினம் முதல் பிரதி யைப் பெற்றுக்கொண்டார். சிறப்புப் பிரதிகளை கலாசா லையில் இருந்து அண்மையில் இளைப்பாறுகை பெற்ற விரிவுரையாளர் மு. ஜெயக்குமாரி, மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களான வதனி கேதாரநாதன், ஜ. ரவிச் சந்திரன் உள்ளிட்டோர் பெற்றுக் கொண்டனர்.

தமிழ்த்துறை விரிவுரையாளர் ந. செல்வஅம்பிகை நூலின் மதிப்பீட்டுரையை ஆற்றினார். விரிவுரையாளர் சி. மனோ கரன் நன்றியுரை ஆற்றினார்.









# கலாசாலையில் ஆங்கில கவிதைநூல் வெளியீடு
# மா.பிரபாகரன் அவர்கள்
## (இணைப்பாளர், வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி) கலந்து சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆங்கில நெறி ஆசிரிய மாணவர்களால் எழுதப்பட்ட மலரும் மொட்டுகள் (Blooming Buds) என்ற ஆங்கில கவிதைகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா 11.12.2024 புதன் காலை 8.30 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெற்றது

இந்நிகழ்வில் வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி இணைப்பாளரும், ஆங்கில பாட விரிவுரை யாளரும் கலாசாலையில் இடம் பெற்று வரும் கல்விமாணிக் கற்கைநெறியின் இணைப்பாள ருமாகிய மா.பிரபாகரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைத்தார்.

நூலின் முதற் பிரதியை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் பெற்றுக்கொண்டார். நிகழ்வுகளை ஆங்கிலநெறி ஆசிரிய மாணவர் சி.மயூரன் முன்னி லைப்படுத்தினார். ஆசிரிய மாணவி ஓரிமா ஜெல் சியா நன்றியுரை ஆற்றினார்.

கலாசாலையின் ஆங்கில பாட விரிவுரையாளர் அருள்லிங்கம் சுஜீவாவின் நெறிப்படுத்தலில் ஆசிரி ய மாணவர்கள் ஆக்கிய கவிதைகள் நூலில் இடம்பெற்றுள்ளன.

நிகழ்வின் நிறைவில் ஆசிரிய மாணவர்கள் தாம் எழுதிய கவிதைகளை ஆற்றுகை செய்தனர்.











# 2022/2023 ஆசிரிய மாணவர் அணியினருக்கான பிரிவுபசார விழா கலாசாலையின் அதிபர் தலைமையில் 12.12.2024 அன்று இடம்பெற்றது

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயின்று பயிற்சியை முடித்துக் கொண்ட ஆசிரிய மாணவர்களுக்கான பிரிவுசார வைபவம் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் காலை முதல் மாலை வரை இடம்பெற்றது

முதலாம் வருட ஆசிரிய மாணவர்களின் ஏற் பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்களின் வாழ்த்துரைகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன

சிறப்பு நிகழ்ச்சியாக கலாசாலையின் பழைய மாணவர் ஜேம்ஸ் அன்ரனின் பிரண்ட்ஸ் இசைக் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி இடம்பெற்றது.
















# பாராட்டி வாழ்த்துகிறோம்
## கலாசாலை இறுதிப் பரீட்சை பெறுபேறுகள் வெளிவந்தன
## இருவர் 12A என்ற உயர் பெறுபேற்றைப் பெற்றனர்

ஆசிரியர் கலாசாலைகளில் 2021/22 கல்வி ஆண்டிற்கான இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த 20.12.2024 அன்று இணையத்தினுடாக வெளியிடப் பட்டன.

இறுதிப்பரீட்சையின் பெறுபேறுகள் உத்தியோக பூர்வமாக கலாசாலைகளுக்கு கிடைக்கப்பெறாத நிலையில் - இணையவழியில் பெறப்பட்ட தகவல்களுக்கு அமைவாக பரீட்சை எழுதிய 94 ஆசிரிய மாணவர்களுள் 9 ஆசிரிய மாணவர்கள் 10A ஈற்கு மேற்பட்ட பெறுபேறுகளை பெற்றுள்ளனர்.

பரீட்சை எழுதிய 94 ஆசிரிய மாணவர்களுள் அனைவரும் சித்தியெய்தி உள்ளனர் சிறப்புநெறி ஆசிரிய மாணவர்களுக்கு 13 பாடங்களும், பிரயோகப் பரீட்சையுள்ள பாடநெறிகளான உடற்கல்வி, ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற பாடநெறிகளுக்கு 14 பாடங்களும் பரீட்சிக்கப்படுகிறது.

சிறந்த பெறுபேற்றைப் பெற்றவர்கள் விபரம் வருமாறு

**திருமதி துஷ்யந்தன் எமில்டா உஷா – ஆங்கிலநெறி – 12A**
**திருமதி சிவரூபன் ஸ்ரீசோபனா – உடற்கல்விநெறி – 12A**
**செல்வி சரவணபவாநந்தன் கல்பணா – வணிகநெறி – 11A**
**செல்வி ஜெயராமன் சாருகேசி - உடற்கல்விநெறி – 11A**
**திரு றொபேட் தேவசகாயம் சுரேஸ் - தமிழ்நெறி – 10A**
**திரு அருணகிரிநாதன் ஜெனார்த்தனா - உடற்கல்விநெறி – 10A**
**திருமதி எலியாஸ் குலியா இமெல்டா - உடற்கல்விநெறி – 10A**
**செல்வி சந்திரசோதி ஸ்ரீசக்தி - உடற்கல்விநெறி – 10A**
**திரு சுப்பிரமணியம் தனசீலன் - உடற்கல்விநெறி – 10A**


எமில்டா உஷா - 12 A


சிவரூபன் ஸ்ரீசோபனா - 12A


சரவணபவாநந்தன் கல்பணா 11A


ஜெயராமன் சாருகேசி - 11A


எலியாஸ் குலியா இமெல்டா - 10A



சந்திரசோதி ஸ்ரீசக்தி - 10A


றொபேட் தேவசகாயம் சுரேஸ் 10A


சுப்பிரமணியம் தனசீலன் - 10A


அருணகிரிநாதன் ஜெனார்த்தனா - 10A

# வெதிதந்திரிகே எதிரிவீர சரத்சந்திரவின் நாடக அரங்கச் செயற்பாடுகள்



எதிரிவீர சரத்சந்திர 1914.06.03 ஆம் ஆண்டு காலி மாவட்டத்தில் ரத்கம என்ற இடத்தில் பிறந்து 1996. 10.16 ஆம் திகதி வரை 82 ஆண்டுகள் வாழ்ந்தார். "1940 தொடங்கிய சிங்கள நாடக மறுமலர்ச்சிக்கான பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் இவர் வழிகாட்டியாகத் திகழ்ந்தார்" என்று பேராசிரியர் ஹேமபால விஜேவர்த்தன கூறுகிறார். இவர் சிங்கள நாடக உலகிற்கு மகா புருசராகத் திகழ்ந்தார். மோடிப்படுத்தப்பட்ட பாணி யிலான நாடகப் பாரம்பரியத்தை நவீன அரங்கிற்காக மறு உருவாக்கப்பட்டமை அவருடைய நாடகப் பணியின் அதி உச்சப்பலனாகும்.

இவர் காலி புனித அலோசியஸ் பாட-சாலை, பாணந்துறை புனித ஜோன் பாடசாலை, காலி றிச்மன்ட், கல்கிஸ்ஸ புனித தோமஸ் பாட-சாலை, போன்ற பாடசாலைகளில் கல்வி கற்றார். 1933 ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றார். அங்கு சமஸ்கிருதம், பாளி, சிங்களம் போன்ற பாடங்களைப் படித்து ஒரு பட்டதாரியாக 1936 ஆம் ஆண்டு வெளியேறினார். இவர் பாட-சாலைக் கல்வியை ஆங்கிலத்தில் கற்றாலும் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதம், பாளி, சிங்க ளம் ஆகிய மொழிகளைக் கற்றமையால் பல்மொழிப்புலமை மிக்கவராகக் காணப்பட்டார். 1939 ஆம் ஆண்டு இந்தியாவில் சாந்தி நி-கேதனத்தில் இந்திய தத்துவத்தையும் இசை யையும் கற்கும் நோக்கில் சென்று சுகவீனம் காரணமாக நோக்கம் நிறைவேறாமல் திரும்பி வந்தார். 1944 இல் இந்திய தத்துவம் முதுகலை-லமாணிப் பட்டதாரியானார். பின்னர் இலண்டன் பல்கலைக்கழகத்தில் மேற்கத்தேய தத்துவம் பற்றிய பட்டப்பின் பட்டதாரியானார்.

1936 ஆம் ஆண்டு ஒரு ஆசிரியராக நியமனம்

**திருமதி சந்திரிகா. தர்மரட்ணம்**



**விரிவுரையாளர் (SLTES)**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை**

பெற்று சிங்களம் கற்பிக்க வெள்ளவத்தை புனித பீற்றர் பாடசாலைச் சென்று ஒரு வருடம் ஆசிரியர-ாகப் பணியாற்றிய பின் லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தின் நிர்வாகத் துறையுடன் இணைந்து கொண்டார். முதுகலைமாணிப் பட்டம் பெற்ற பின் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் விரிவுரைய-ாளராக இணைந்து கொண்டார். இலண்டன் பல்கலைக்கழகத்தில் மேற்கத்தேய தத்துவம் பற்றிய பட்டப்பின் பட்டதாரியான பின்பு அவர் பாளி மொழித்துறையில் ஒரு நிரந்தர விரிவுரையாளராகச் செயற்படத் தொடங்கினார். 1952 ஆம் ஆண்டு நவீன சிங்கள இலக்கியத்தைக் கற்பிக்க சிங்கள மொழித்துறையில் விரிவுரையாளர் பதவி கிடைத்தது. 1966 – 1967 காலப் பிரிவில் அமெ-ரிக்காவில் டெனிஸன் பல்கலைக்கழகத்தில் அதிதி பேராசிரியராகவும் செயற்பட்டார். 1974 ஆம் ஆண்டு பிரான்ஸ், இலங்கைத் தூதுவராக பணியாற்றினார். 1977 – 1979 வரையிலான காலப்பகுதியில் அமெ-ரிக்காவின் ஹவாய் என்ற இடத்தில் அமைந்துள்ள ஈஸ்ட் வெஸ்ட் ஹென்ரற் நிறுவனத்தின் ஒரு பேராசிரியராகக் கடமையாற்றினார்.

இவருக்கு நாடக ஈடுபாட்டுக்கான பின்னணிக் காரணங்களை நோக்குவோமாயின், சிறு வயதில் கலையில் ஆர்வம் மிக்கவராகக் காணப்பட்டார். உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் அதாவது சிறுவயதில் கிராமிய நாடகம நாடகங்களை பார்ப்பதற்கு தனது சிறிய மாமனாருடன் சென்று பார்க்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். இது இப்பிரதேசத்தில் நடைபெறுகின்ற கிராமிய நாடகம நாடகங்களை

# வெதிதந்திரிகே எதிரிவீர சரத்சந்திரவின் நாடக அரங்கச் செயற்பாடுகள்

பார்ப்பதற்கான வாய்ப்புக்களை வழங்கியுள்ளது. மேலும் ஜோன் டி சில்வா, சால்ஸ் டயஸ் போன்றவர்களின் நூர்த்திப் பாடல்களை 'கிரமபோன்' இசைத்தட்டில் வீட்டில் கேட்கும் வாய்ப்பினையும் பெற்றிருந்தார்.

பௌத்தபிக்குகளின் பீடங்களின் தொடர்பு இவரது நாடகப் படைப்பிற்குக் காரணமாகும். ஊரில் ரண-பனாதெனிய விகாரைப் பிக்குவுடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் பாளி, சிங்கள மொழிப் புத்தகங்களை வாசித்துக் காட்டினார். மேலும் 19 நூற்றாண்டில் தோன்றிய சமய மறுமலர்சிக்கு காரணமாகிய விவாதங்களை சரச்சந்திர பிறந்த கிராமத்தில் வசித்வர்கள் நடத்தினார்கள். இவற்றையெல்லாம் அவர் பார்த்தார்.

கொழும்பை அண்டிய பிரதேசங்களில் மேடையேற்றப்படும் ஆங்கில நாடகங்கள், நுர்த்தி, ரவர்கோல் நாடக மரபு, ஜெயமான அல்லது மினர்வா நாடகங்கள் பார்வையிட்டார். கொழும்பு பல்கலைக்கல்லூரிகளின் நாடகங்களையும் பார்வையிட்டார். பேராசிரியர் என். எப். ஸீ லுடொவெக்கின் வழிநடத்தலில் இயங்கிய கொழும்பு பல்கலைக்கழக நாடகமன்றம் வருடந்தோறும் ஆங்கில நாடகம் தயாரித்து வந்தது. சிங்கள மன்றமும் பல்கலை நி-கழ்ச்சிகளை தயாரித்து வந்தது. இவற்றை அவர் பார்த்தாலும் அவர் மனம் இவற்றில் ஈடுபடவில்லை. காரணம் மொழிபெயர்ப்பு நாடகம் தழுவல் நாடகம் போடப்பட்டமையாகும்.

1950 ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தில் இந்த நாட்டுக் கிராமியப் பாடல்கள் மற்றும் நாடகங்கள் போன்ற கலை அம்சங்களை ஒலிப்பதிவு செய்யும் குழுவில் இவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. இது உள்ளுர் நாடகக் கலையொன்றின் பயணத்தை மேற்கொள்ள பெரும் உதவியாக இருந்தது.

1955 ஆம் ஆண்டு ஜப்பான் சென்று இங்கு நோ, கபுக்கி மற்றும் சீன பீஜிங் ஒப்பேரா நாடகங்களைப் ஆய்வு ரீதியாக பார்வையிட்டார். சாந்தி நிகேதனத் தரிசிப்புக்கள், வெளிநாட்டு பயணங்கள், உள்நாட்டு கலைகள் என்பவற்றின் அடிப்படையில் தமக்கெனத் தேசிய நாடக வடிவத்தைத் தேட உதவியது எனக் கூறலாம்.

நாடக ஆர்வம் காரணமாக 1951 ஆம் ஆண்டு 'சிங்கள நாட்ய மண்டலய' என்ற சிங்கள் நாடக சபையைத் ஸ்தாபித்தார். இவரை நினைவுகூறும் முகமாக கலாச்சார திணைக்களத்தின் பூரண தலையீட்டின் மீது 2015.03.11 ஆம் திகதி 'எதிரிவீர சரச்சந்திர நாடகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவகம்' ஒன்று பத்தரமுல்ல கொழும்பில மைக்கப்பட்டுள்ளது.

இவர் நாடகாசிரியர், தயாரிப்பாளர் மட்டுமல்ல. சிறுகதைகளையும், நாவல்களையும், ஆய்வு நூல்களையும் எழுதியுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய போது சிங்கள நாடகங்களைப் பற்றி மேற்கொண்ட ஆய்வு 'The Folk Drama of Ceylon' என்ற பெயரில் வெளிவந்தது. 1954 ஆம் ஆண்டு 'Sinhalese folk Plays' ஆய்வு நூலை எழுதினார். (பலி, தொவில், சொக்கரி, கோலம, நாடகம போன்ற உள்ளுர் நா-டகப் பாரம்பரியத்தைத் தேடும் முயற்சியின் போது கிடைத்த கோட்பாட்டு ரீதியான பலன்களை இவ் ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளார்).

இவரது நாடகங்களை நோக்குவோமாயின் 35 நா-டகப் பிரதிகள் வரை எழுதியுள்ளார். அன்றாட சமூகப் பிரச்சினைகள், மனித பேராசை தலைமுறை முரண்பாடு இவரது நாடகங்களில் பிரதிபலித்தது. கிரேக்கத்தில் பயன்படுத்திய கோரஸ்சை "மனமே, சிங்கபாகு"வில் பயன்படுத்தினார். பெத்தே குருவை (ஏடு பார்ப்பவர்) அறிமுகம் செய்தார்.

# வெதிதந்திரிகே எதிரிவீர சரத்சந்திரவின் நாடக அரங்கச் செயற்பாடுகள்

கொடூர குணங்களை விடுத்து மனிதாபிமானப் பாத்திரங்களைப் படைத்தார். பலவகையான இசைக்கருவிகளைப் பயன்படுத்தினார். உடை ஒப்பனையில் கவனம் செலுத்தினார், ஒளியமைப்பில் நவீனத்தைக் கையாண்டார். படச்சட்ட அரங்கை கொண்டு வந்தார். மகிழ் நெறி நாடகங்கள் இவரின் மீது செல்வாக்கு செலுத்தி இருந்தது. தெருக்கூத்து, கதகளி ஆகியவற்றை உள்வாங்கியதுடன் நூர்த்தி, நாடகம, கூத்து, இசைநாடகம், தொவில், கங்காரி, கோலம, ஜாதகக் கதைகள் போன்றவற்றிலிருந்து தனித்துவமான நாடகங்களைப் படைத்தார்.

'முதலாலிகே பெறலிய' (முதலாலியின் மாற்றம்) 1943.12.16 பல்கலைக்கழகத்தில் சிங்கள மன்றத்தால் தயாரிக்கப்பட்டது. இது இவரது முதலாவது தழுவல் நாடகமாகும். சரத்சந்திர மற்றும் விஜேயரத்ன என்ற இருவர் சிங்கள நாடகக் கலைக்கு உயிரூட்டும் பொருட்டு பேராசிரியர் லுடொவைக்கின் அனுபவங்களையும் திறமைகளையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை கொண்டிருந்தார்கள். இருவரும் சேர்ந்து நாடகத்தை எழுதினார்கள்.

'பபாவதி' 1952 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. பௌத்த ஜாதகக் கதை ஒன்றான குஸா ஜாதகக் கதையை அடிப்படையாகக் கொண்டு 19ம் நூற்றாண்டில் பிரபலமாக இருந்த இயற்கை உரையாடல்களை பயன்படுத்தினார். இதில் நாடகம பாரம்பரியத்தைச் சேர்ந்த இரு பாடல்களைப் பொத்தே குரு பாடுகிறார்.

'வெத ஹடன' (மருத்துவப் போர்) 1953 ஆம் ஆண்டு நியூமான் ஜீபால் என்பவருடன் (நாடகத் தயாரிப்பிற்கான எழுத்துருக்களை விஜேயரத்ன, குணரத்னா ஆகியோருடன் இணைந்து எழுதும் போது மேற்கத்தேய நாடகங்களை சிங்கள மொழிக்கு தழுவல் செய்வதன் ஊடாக உள்ளூர் நாடகக் கலை ஒன்றினை உருவாக்க முடியுமா என்ற சந்தேகம் ஏற்பட்டது) பல்கலைக்கழக மாணவர்களின் பங்களிப்புடன் இந் நாடகத்தைத் தயாரித்தார். பல்கலைக்கழக நாடக வரலாற்றில் புரட்சிகரமான நாடகமாக விளங்கியது. நடிகை, நடிகர்களின் எல்லா அபிநயங்களும் நாடகத்தில் வரும் பாத்திரங்களைச் சார்ந்ததாகவும் நெறியாளர் கருத்தை பிரதிபலிப்பதாகவும் இருந்தது. நாடகத்துடன் பொருந்தும் இசை ராகத்துடன் அடிக்கடி இசைக்கப்பட்டது. சீன நாடகப்பாரம்பரியத்தின் சில பண்புகளையும் நாடகத்தில் பயன்படுத்திக் கொண்டார்

'ரத்தரன்' (பொன்) என்ற ஒரு வானொலி நாடகத்தை 1954 ஆம் ஆண்டு எழுதித் தயாரித்தார். இது உள்ளூர் பலி, தொவில் போன்ற சடங்கு சம்பிரதாயங்களை பின்பற்றி தயாரித்த தொன்றாக இருந்தது. இந்நாடகத்தை மேடை நாடகமாக 1958 ஆம் ஆண்டு தயாரித்தார். 'வந்தின்ன கிய தேவாலே' (கும்பிடப் போன கோவில்) 1955 ஆம் ஆண்டு தயாரித்தார். இது இயற்கைப்பாணி உரையாடல்களைக் கொண்ட ஒரு சுயபடைப்பு நாடகமாகும். இது குறிப்பிட்ட கால சமூகத்தை விமர்சிக்கும் நாடகமாகும்.

இலங்கை, இந்தியா, ஜப்பான், சீனா போன்ற நாடுகளின் பாரம்பரிய நாடகக் கலையை கீழைத்தேய நாடகக் கலையாக அறிமுகப்படுத்தினார். சீன ஜப்பான் நாடுகளுடனும் சமஸ்கிருதம், தெருக்கூத்து அரங்கப்பாணிகளுடனும் ஒத்துப் போவதாக "நாடகம" வடிவம் காணப்பட்டது என்று கூறினார். இந்நாடுகளின் நாடகங்களுடன் ஒப்பிடக் கூடிய நாடக வடிவம் எம்மிடம் உள்ளன என்றும் அது தான் 'நாடகம' என்றும் குறிப்பிட்டார்.

'மனமே' நாடகம் 1956. 11. 03 ஆம் திகதி கொழும்பு இலயனல் வென்றட் அரங்கில் மேடையேற்றப்பட்டது.

# வெதிதந்திரிகே எதிரிவீர சரத்சந்திரவின் நாடக அரங்கச் செயற்பாடுகள்



இதுவரை மனமே கதையை கோலம அல்லது கவிதை நாடகமாக கிராமங் களில் மேடை யேற்ற ப்பட்டு வந்தது. இதனை நாடகம பாரம்பரியத்தில் மேடை யேற்றிய முதலாவது சந்தர்ப்பம் ஆகும். அவ்வாறு மேடையேற்றினாலும் நாடகமவின் எல்லாப் அம்சங்களையும் நான் இதன் போது சேர்த்துக் கொள்ளவில்லை என்றும் கோலம போன்று நாடக உத்திகளிலும் நாடகம பாரம்பரியத்தைச் சார்ந்த இராகங்கள், தாளங்கள், இசைக்கருவிகள், மற்றும் ஆடை ஆபரணங்கள் என்பவற்றிலிருந்தும் வெல்வாக்குப் பெற்றிருந்தன என்றும் தேவை யானபடி சீன ஜப்பான் நாடகப் பண்புகளையும் சேர்த்துக் கொண்டேன் என்றும் கூறுகிறார்.

"சுல்லதனுத்தர" ஜாதக் கதைப்புத்தகத்தில் வருகின்ற 372 வது கதையாகும். மனமே என்ற இளவரசனுக்கு சுல்லதனுத்தர என்ற பட்டம் குருவினால் வழங்கப்பட்டு தனது புதல்வியை திருமணம் செய்து கொடுக்கிறார். இளவரசன் கல்வி அறிவு உடையவன் அனுபவ அறிவு குறைந்தவன். மனைவி புத்திசாதுரியமானவள். பின் காட்டு வழியூடாகச் செல்லும் போது உணவுக்காக போர் செய்யும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. இவர் கதையில் மனமே நாடகக் கதையில் மாற்றம் செய்துள்ளார். ஜாதகக் கதையில் வேட்டுவத் தலைவன் வாள் கேட்க அவள் வாள் கொடுத்து இளவரசன் கொள்ளப்படுவதாக உள்ளது. இங்கு வேட்டுவத் தலைவனுக்கு அவள் வாள் கொடுப்பதில்லை. மாறாக வேடர் தலைவன் வாளை அவளிடமிருந்து பறித்தெடுக்கிறான். திருமணக் காட்சியுடன் நாடகம் ஆரம்பமாகிறது. மேலும் ஜாதகக் கதையில் நரி வந்து அவளை இகழ்ச்சிப்படுத்துவதாக உள்ளது.. நாடகத்தில் இக்காட்சி இல்லை. கணவனை இழந்து நிர்க்கதியாகும் ஒரு பெண்ணின் நிலையை ஆழமானதொரு வாழ்க்கை ஞானத்தைத் தருவ-தான இவரால் சித்தரிக்கப்படுகிறது.

'பேமதோ ஜாயதி ஸோகோ' (காதல் காரணமாக சோகம் உருவாகிறது) 1957 ஆம் ஆண்டு தய-ாரித்தார். இது முழுமையாகவே ஒரு ஒப்பேரா நா-டகமாகும். சத்தர்மாலங்காரய எனப்படும் நூலில் வரும் ஸ்வர்ணதிலகா என்ற கதையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டாலும் பெண்ணைப் பற்றிய பாரம்பரிய பார்வையை நிர-ாகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

'கதா வலலு' (கண்ணாடிக் காப்புக்கள்) 1958 ஆம் ஆண்டு தயாரித்தார். 'எலொவ கிஹின் மெலெ-ாவ' (பரலோகத்திற்குச் சென்று இவ்வுலகத்திற்கு வந்தேன்) 1959 ஆம் ஆண்டு தயாரித்தார். இது சிங்கள நாட்டார் கதையை அடிப்படையாகக் கொண்டது. 'வெள்ள வெஹும'' என்ற நகைச்சுவை நிறைந்த நாடகத்தை 1960 ஆம் ஆண்டு தய-ாரித்தார். இது செகறி எனப்படும் கிராமிய நாடகப் பாரம்பரியத்தின் செல்வாக்குப் பெற்று தய-ாரிக்கப்பட்ட ஒரு பரீட்சார்த்த முயற்சியாகும். ஏக்கட மட்ட ஹினா ஹினா' (அது எனக்கு சிரிப்பாக இருந்தது) என்ற நாடகத்தை 1961 ஆம் ஆண்டு தயாரித்தார். இதுவும் ஜாதகக் கதையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்**பட்டது.**

'சிங்ஹபாஹு' 1961ஆம் ஆண்டு தயாரித்தார். மஹ வங்ஸய என்ற நூலின் ஆறாம் அத்தியாயத்தில் வரும் சிங்களவரின் பிறப்புத் தொடர்பான கதையை அடிப்படையாகக் கொண்டு இந்நாடகத்தை எழுதியுள்ளார். ஒரு துயரம் மிகுந்த அனுபவத்தைக் கலை ரீதியாகவும் ஆழமான பார்வையுடனும் மறு உருவாக்கம் செய்துள்ளமை சிங்கபாகு நாடகத்தின் சிறப்பான அம்சமாகும். பிள்ளைகள் மீதான அன்பும், பரம்பரைக்கிடையிலான முரண்பாடும், கற்பனையான

# வெதிதந்திரிகே எதிரிவீர சரத்சந்திரவின் நாடக அரங்கச் செயற்பாடுகள்



காதலின் முறிவும், வயது வந்த பிள்ளைகள் சுயாதீனமாக சிந்திக்கத் தொடங்குவதும், குடும்பத்தின் ஆசாபாசங்களில் ஏற்படும் மாற்றங்களையும் இந்த நாடகங்களில் சித்தரித்துக் காட்டியுள்ளார். நாடகத்தில் வரும் சுப்பாதேவி ஒரு பொது மனிதப் பண்பு கொண்ட பாத்திரமாகச் சித்தரிதுள்ளார். ஜாதகக் கதையில் காம இச்சை காரணமாகத்தான் சுப்பாதேவி சிங்கத்துடன் வாழ்ந்ததாகக் கூறுகிறது. ஆனால் நாடகத்தில் தீராக்காதல் தான் காரணம் எனக் கூறுகிறார். கிரேக்க கோரசை பயன்படுத்தியுள்ளார். பொத்தே குருவை அறிமுகம் செய்கிறார். மனிதாபிமானப் பாத்திரங்களைப் படைத்தார். இசை, ஒளி அமைப்பு ஒலி அமைப்பு இசை வேட உடையில் கவனம் செலுத்தினார்.

'மஹாசாரா' என்ற நாடகத்தை 1967ஆம் ஆண்டு தயாரித்தார். ஜலக்கிரீடையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணியின் ஆபரணம் தொலைந்து விடுகிறது. ஆபரணத்தை கண்டெடுக்கும் முயற்சியால் சமூகத்தில் நிலவும் கவலைக்குரிய நிலைமைகளை வெளிக்கொண்டு வருவதாக அமைந்துள்ளது.

'வடஹுலுவே கெவல் பிந்தீம' (வடஹுலுவே என்ற இடத்தில் வீடுகளைக் கொள்ளையடித்தல்) என்ற நாடகம் 1972 ஆம் ஆண்டிலும், 'வெஸ்ஸந்தர' என்ற இசை நாடகத்தை 1980 ஆம் ஆண்டிலும தயாரித்தார். இதிலும் வெஸ்ஸந்தர ஜாதகக் கதையைத் தேர்ந்தெடுத்தார். கொடை என்ற புண்ணிய கருமத்தை மேற்கொள்ள எடுத்த முயற்சியை சார்ந்த கதையாகும்.

'கிரி முட்டிய கங்கே கியா' (பால்சட்டி ஆற்றில் அள்ளிச் செல்லப்பட்டது) என்ற நாடகத்தை 1983 ஆம் ஆண்டு தயாரித்தார். 'பவ கடதுராவ' ஸ்வர்ண ஹங்ஸ என்ற ஜாதகக் கதையை அடிப்படையாகக் கொண்டு 1989ஆம் ஆண்டு தயாரித்தார். லோம ஹங்ச என்ற நாடகத்தை 1985ஆம் ஆண்டு தயாரித்தார். இது மஹ பதும ஜாதகய என்ற கதையை அடிப்படையாகக் கொண்டது. ஒரு கிழவன் யுவதியை திருமணம் செய்வதால் ஏற்படும் பிரச்சினைகள் இக்கதையால் வலியுறுத்தப்படுகிறது.

Honorary D.Litt. from the University of Jaffna, Honorary D. Litt from the University of Peradeniya, Kumaran Asan World Prize, Roman Magsaysay Awards ஆகியன இவர் பெற்ற விருதுகளாகும்.

இவரது துணைவியர் ஜலீன் பெலத், லலித்தா சுவர்ண பெரேரா. லலித்தா சுவர்ண பெரேரா ஒரு சிறுவர் நாடகத் தயாரிப்பாளர். இவரது பிள்ளைகள் ஐவர். நந்திதா, சுனேத்திரா, கிசகோதமி, யசோதரா, ரன்சி. சுனேத்திரா பிரபலமான மேடை நாடக, சினிமா, தொலைக்காட்சி நடிகை. இவர் தந்தையின் 'கபுவா கவபோதி' என்ற மேடை நாடகத்தின் மூலம் நடிப்புலகிற்கு வந்தார்

தயானந்த குணவர்தன, சோமலதா சுபசிங்க, தம்ம ஜா கொட, ஹென்றி ஜெயசேன, குணசேன கலப்பதி ஆகியோர் இவரது பாணியை பின்பற்றி நாடகங்களைத் தயாரித்தார்.

**உசாத்துணை**

விமல். சா, பராக்கிரம நிரியல்ல, சிங்கள நாடகக் கலை ஆளுமைகள், (2013). மக்கள் களரி, ராஜகிரிய.

https://en.wikipedia.org/wiki/Ediriweera_Sarachchandra

https://www.goodreads.com/author/show/1037739.Ediriwira_Sarachchandra

https://images.app.goo.gl/RcfF85g4uS1g8TYu8

https://images.app.goo.gl/HjjsauHhaFT87ipc8

https://www.culturaldept.gov.lk/index.php?option=com_content&view=article&id=41&Itemid=183&lang=ta

## 2021/22 - கல்வி ஆண்டு பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 11.01.2024




2021/22 கல்வி ஆண்டு அணியினருக்கான பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ள வேளையில் இதில் சித்தியெய்தியோருக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வுகள் எதிர்வரும் 11.01.2024 சனிக்கிழமை அன்று பிற்பகல் 2 மணிக்கு கலாசாலையின் ரதிலஷ்மி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலாசாலை அதிபர் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வு வடமாகாண ஆளுநர் கௌரவ நாகலிங்கம் வேதநாயகன் அவர்கள் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளை உடற்கல்வி நெறி ஆசிரியர் செல்வராசா சன்சயன் தலைமையிலான விழாக் குழுவினர் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

## 2025 ஆம் ஆண்டிற்கான கலாசாலைகளுக்கான நாள்காட்டி

2025 ஆம் ஆண்டு கலாசாலைகளுக்கான கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நாள்காட்டி கல்வி அமைச்சின் ஆசிரிய கல்வி நிர்வாகத்தினரால் கலாசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம்

**முதவாம் தவணை**

2025 ஜனவரி மாதம் 06ம் திகதி திங்கட்கிழமை முதல் ஏப்ரல் மாதம் 10ம் திகதி வியாழக்கிழமை வரை

(ஜனவரி 6ம் திகதி ஏப்ரல் 10ம் திகதி ஆகிய தினங்களும் உள்ளடங்கலாக)

**இரண்டாம் தவணை**

2025 ஏப்ரல் மாதம் 21ம் திகதி திங்கட்கிழமை முதல் ஆகஸ்ட் மாதம் 01ம் திகதி வியாழக்கிழமை வரை

(ஏப்ரல் 21ம் திகதி ஆகஸ்ட் 01ம் திகதி ஆகிய தினங்களும் உள்ளடங்கலாக)

**மூன்றாம் தவணை**

2025 செப்ரெம்பர் மாதம் 01ம் திகதி திங்கட்கிழமை முதல் டிசம்பர் மாதம் 12ம் திகதி வெள்ளிக்கிழமை வரை

(செப்ரெம்பர் 01ம் திகதி டிசம்பர் 12ம் திகதி ஆகிய தினங்களும் உள்ளடங்கலாக)

இப்பத்திரிகை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஊடகமன்றத்தினால் 01.01.2025 அன்று மின்னிதழாக வெளியீடு செய்யப்பட்டது